**சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்**

முன்னிலை **திரு.S.பாஸ்கரன், M.A., L.L.M.,**

சார்பு நீதிபதி, ஆரணி,

2026–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 நாள் புதன்கிழமை

**IA.No.02/2025 in OS.No.142/2020**

**(TNTM03000153/2020)**

கஸ்தூரி ... மனுதாரர்/வாதி

/எதிராக/

1. கோவிந்தசாமி பிள்ளை
2. வெங்கடேசன்
3. சுலோச்சனா
4. சரவணன் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 01.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.V.ரத்தினகுமார்,B.A.B.L., மற்றும் திரு.V.அறிவழகன்,M.A.B.L., ஆகியோர் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு.S.தனஞ்செயன், M.A.LL.B., மற்றும் திரு.N.ஜெகதீசன், B.A.,B.L., ஆகியோர் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், சான்றாவணங்களை பரிசீலித்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

தாவா அசல் வழக்குரையில் மனுவில் கண்டுள்ளவாறு திருத்தங்களை செய்ய அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 விதி 17ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்/வாதி தாக்கல் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கினை பாகப்பிரிவினை பரிகாரத்திற்காகவும் 27.05.2002 மற்றும் 02.08.2014 தேதியிட்ட ஆவணங்களைச் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரியும் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் தந்தை பெயர் முனிய பிள்ளை, மனுதாரரின் தாத்தா பெயர் முனுசாமி பிள்ளை, மனுதாரரின் தாத்தாவின் தந்தை பெயர் வீராசாமி பிள்ளை. 4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், முனிசாமி

பிள்ளையின் தந்தை பெயர் முனிய பிள்ளை என்று குறிப்பிட்டுள்ளார். ஆனால் உண்மையில், முனிய பிள்ளையின் தகப்பனார் தான் முனுசாமி பிள்ளை என்ற விவரம் 17.12.1949 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே முனிய பிள்ளையின் தகப்பனார் பெயர் முனுசாமி பிள்ளை, முனுசாமி பிள்ளையின் தகப்பனார் பெயர் வீராசாமி பிள்ளை என்பது தெளிவாகிறது. "A" அட்டவணை சொத்து முனுசாமி பிள்ளை த/பெ. வீராசாமி பிள்ளை என்பவருக்கும் "B" அட்டவணை சொத்து முனிய பிள்ளை த/பெ. முனுசாமி பிள்ளை என்பவருக்கும் 17.11.1949 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி "A" அட்டவணை சொத்தை முனுசாமி பிள்ளை 17.10.1960 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணப்படி தனது மகள் முனியம்மாளுக்கு எழுதிக்கொடுத்துள்ளார். 27.05.2002 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள பெயர் மற்றும் தகப்பனார் பெயர் அடையாளங்கள் தவறாக உள்ளது. அதன் அடிப்படையில் தவறுதலாக முனிய பிள்ளை வீராசாமியின் மகன் என்றும், முனுசாமி , முனிய பிள்ளையின் மகன் என்றும் தவறுதலாக நம்பப்பட்டுள்ளது. உண்மையில், வீராசாமியின் மகன் முனுசாமி பிள்ளை மற்றும் முனுசாமியின் மகன் முனிய பிள்ளை ஆகும். முனுசாமி பிள்ளை, அவரது மனைவி மங்கையம்மாள், அவரர்களது மகள் முனியம்மாள் ஆகியோர் சேர்ந்து 05.09.1962லும், மீண்டும் 12.07.1974லும் பதிவு செய்யப்பட்ட அடமான பத்திரம் எழுதியுள்ளார்கள். மனுதாரரின் தந்தை பெயர் முனியபிள்ளை என்ற முனுசாமி பிள்ளை என்று தவறுதலாக வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரரின் தந்தைக்கு முனுசாமி பிள்ளை என்ற பெயர் இல்லை. மனுதாரரின் தாத்தா பெயர் முனுசாமி பிள்ளை ஆகும். எனவே வழக்குரையில் குறிப்பிட்டுள்ள என்கிற முனுசாமி பெயரை நீக்கம் செய்ய அனுமதிக்கவேண்டும் என்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>4ம் எதிர்மனுதாரர்/4ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையை 3ம் எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்டுள்ளார் அதன் சுருக்கம்:–</u>**

வழக்குரையை திருத்தம் செய்ய தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படியும் சங்கதிப்படியும் ஏற்புடையதல்ல. மனுவில் குறிப்பிட்டுள்ள இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஒரு சில சங்கதிகள் தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். இம்மனுவில் மனுதாரரின் தந்தை பெயர் முனிய பிள்ளை, தாத்தா பெயர் முனுசாமி பிள்ளை, தாத்தாவின் தந்தை பெயர் வீராசாமி பிள்ளை என்று கூறியுள்ளார். ஆனால், வழக்குரையில் 3வது பத்தியில் 2வது வரியில் முனுசாமி பிள்ளைக்கு முனுசாமி பிள்ளை (எ) முனிய பிள்ளை என்ற மகனும், முனியம்மாள் என்ற மகளும் உள்ளதாகவும், முனுசாமி பிள்ளை (எ) முனியபிள்ளை மனுதாரரின் தகப்பனார் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்குரையிலும், இந்த மனுவிற்கான நிரூபண வாக்குமூலத்திலும் மனுதாரர் தவறான விவரங்களை கூறியுள்ளார். வழக்குரையின் 4வது பத்தியில் 4வது வரியில் முனுசாமி பிள்ளை (எ) முனியபிள்ளை

மற்றும் அவருடைய தகப்பனாருக்கு இடையே பாகப்பிரிவினை ஏற்பட்டதாகவும், முனுசாமி பிள்ளை (எ) முனியப்பிள்ளைக்கு "B" அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டதாக கூறிவிட்டு இந்த மனுவில் மாற்றமாக விவரம் கூறியிருக்கிறார். வழக்குரையில் 5வது பத்தியில் முனுசாமி பிள்ளை (எ) முனியபிள்ளைக்கு வழக்கு சொத்து கிடைத்ததாகவும், அவர் 28.08.2024ல் இறந்துவிட்டதாகவும் விவரம் கூறிவிட்டு இம்மனுவில் மாற்றமாக கூறியுள்ளார். முனுசாமி பிள்ளை (எ) முனியபிப்ளை 3ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்ததாகவும் விவரம் கூறிவிட்டு இம்மனுவில் மாற்றமாக கூறியுள்ளார். வழக்குரையில் முனுசாமி பிள்ளை என்கிற வார்த்தையை நீக்கவேண்டும் என்பதை மனுதாரர் கூறியிருப்பதை அவர்தான் நிரூபணம் செய்யவேண்டும். இந்த எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் முனுசாமி பிள்ளைக்கும் மற்றும் முனிய பிள்ளைக்கும் உள்ள உறவுமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு 4 1/2 வருடங்கள் அமைதியாக இருந்து விட்டு தற்போது வழக்குரையை திருத்தம் செய்ய மாற்றமாக விவரம் கூறி தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையில் உள்ள சங்கதி என்னவென்றால், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

4. **பிரச்சனைக்கான தீர்வு:–**

இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் 2 ஆவணங்கள் செல்லாது என விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் மனுதாரர்/வாதியின் தந்தை பெயர் முனுசாமி பிள்ளை (எ) முனிய பிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரரின் தகப்பனார் பெயர் முனிய பிள்ளை என்றும் தவறுதலாக வழக்குரையில் முனிசாமி பிள்ளை (எ) முனிய பிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மனுதாரரின் தகப்பனார் பெயர் உண்மையில் முனிய பிள்ளை என்றும், அதற்கான ஆவணங்களாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே வழக்குரையில் இம்மனுவில் கண்டவாறு முனுசாமி பிள்ளை என்ற வார்த்தைகள் நீக்கம் செய்து வழக்குரையை திருத்தம் செய்யவேண்டும் என்று வாதம் செய்யப்பட்டுள்ளது.

5. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில், வழக்குரையில் வாதியின் தகப்பனார் பெயர் முனுசாமி பிள்ளை (எ) முனிய பிள்ளை என்று விவரம் கூறிவிட்டு தற்போது இம்மனுவில் வாதியின் தகப்பனார் பெயர் முனிய பிள்ளை என்று மாற்றமாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில், வாதியின் தகப்பனார் பெயர் தவறுதலாக

உள்ளது என்று குறிப்பிட்டுள்ள நிலையில், எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகு 4 1/2 வருடங்கள் கழித்து வழக்குரையை திருத்தம் செய்ய தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது.

6. மனுதாரரின் தகப்பனார் பெயர் முனிய பிள்ளை என்றும், வழக்குரையில் தவறுதலாக மனுதாரரின் தகப்பனார் பெயர் முனுசாமி பிள்ளை (எ) முனிய பிள்ளை என்று குறிப்பிட்டிருப்பதாகவும், உண்மையில் மனுதாரரின் தந்தை பெயர் முனிய பிள்ளை என்றும், முனிய பிள்ளையின் தந்தை பெயர் முனுசாமி பிள்ளை என்றும், முனுசாமி பிள்ளையின் தந்தை பெயர் வீராசாமி பிள்ளை என்றும் இம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களில் முனுசாமி பிள்ளையின் தகப்பனார் பெயர் வீராசாமி பிள்ளை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி ஆவணங்கள் அடிப்படையில் முனுசாமி பிள்ளை என்பவர் மனுதாரரின் தந்தை அல்ல என்பதும் மனுதாரரின் தாத்தா என்பதும் மேற்படி ஆவணங்கள் அடிப்படையில் தெரியவருகிறது. எனவே மனுதாரரின் தந்தை பெயர் முனிய பிள்ளை என்றும், வழக்குரையில் குறிப்பிட்டுள்ள முனுசாமி பிள்ளை (எ) முனிய பிள்ளை என்ற வார்த்தையில் முனுசாமி பிள்ளை (எ) என்ற வார்த்தையை நீக்கம் செய்து வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதிக்கவேண்டும் என்று தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்க்கும் வகையில் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அசல் வழக்கை மேல் நடத்தி தீர்வு காண்பதற்கு இம்மனுவில் கண்டவாறு வழக்குரையை திருத்தம் செய்யவேண்டியது அவசியம் என்பதால் இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்படுகிறது.

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.06.17 17:46:27 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :–</u>** இல்லை

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 17.06.1960 | தேதியிட்ட முனுசாமி பிள்ளை த/பெ. வீராசாமி பிள்ளை எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.2 | 05.09.1962 | தேதியிட்ட முனுசாமி பிள்ளை த/பெ. வீராசாமி பிள்ளை மற்றும் பலர் எழுதிக்கொடுத்த அடமான ஆவணம் சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.3 | 12.07.1974 | தேதியிட்ட முனுசாமி பிள்ளை த/பெ. வீராசாமி பிள்ளை எழுதிக்கொடுத்த அட்மான ஆவணம் சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.4 | – | வம்சாவழி அட்டவணை. |

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :–</u>** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றிவணங்கள்:–</u>** இல்லை

BASKARAN S

Digitally signed by BASKARAN S
Date: 2026.06.17 17:46:39 +0530

சார்பு நீதிபதி,

ஆரணி.